**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண். 11/2024

பெயர்:– பழனியம்மாள் நாள்:19.09.2025

பி.வா.சா. 4 ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (4,5 பிரதிவாதிகள் தரப்பில்)

என் அப்பா பெயர் மாரப்ப கவுண்டர், அம்மா பெயர் மலையம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு நான் ஒரு மகள் மற்றும் எனது சகோதரர்கள் தங்கவேல் மற்றும் சாமியப்பன் ஆகியோர்கள் ஆவோம். எனது சகோதரர் தங்கவேல் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்றால் திருமணமான பின்னர் இறந்துவிட்டார். தங்கவேலுக்கு மனைவி மகன் உள்ளார்களா என்றால் அவர்களும் இறந்துவிட்டார்கள். தங்கவேலுக்கு திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்று எனது அப்பா, அம்மா அவர்கள் எழுதி வைத்த ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அது பொய். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வாதத்தில் தங்கவேலின் சொத்துக்கள் முழுவதும் அவர் இறப்பிற்கு பின்னிட்டு எனது தாயாருக்குதான் சொந்தம் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 2002ம் வருடத்தில் தன்னுடைய பேரன் சண்முகத்திற்கு உயில் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரிந்து கொண்டேன். என் அம்மா மலையம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது பேரன் சண்முகத்திற்கு உயில் எழுதி பின்னர் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரிந்து கொண்டேன். கட்டாயப்படுத்தி எழுதியுள்ளார்கள். மேற்படி ஆவணங்கள் சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை எனது அப்பா, அம்மாவை கட்டாயப்படுத்தி எழுதி வாங்கினார்கள் என்ற விவரத்தை எனது எதிர் வாதத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா, அம்மாவின் பேரன் சண்முகம் என்பவர் எனது சகோதரர் சாமியப்பனின் மகன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல்செய்துள்ள

## Copy of Deposition

ஜோதிமணி என்பவர் சாமியப்பனின் மகள் என்றால் சரிதான். இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி கண்ணம்மாள் சாமியப்பனின் மனைவி என்றால் சரிதான். சாமியப்பன் உயிருடன் இருந்தபோது அவருடைய சொத்துக்கள் அனைத்தையும் தனது மகன் சண்முகத்திற்கு எழுதி வைத்தார் என்றால் எழுதி வைக்கவில்லை 4ம் பிரதிவாதியே தயாரித்து கொண்டார். சாமியப்பன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறக்கும்போது அவரது மகன் சண்முகம் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் முழுவதும் சாமியப்பன் மகன் சண்முகத்திற்கு அவரது தாத்தா மாரப்ப கவுண்டர், அப்பாவின் அம்மா மலையம்மாள், சாமியப்பன் ஆகியோர் எழுதி வைத்த ஆவணங்கள் படி சண்முகத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் மூலம் தாவா சொத்துக்கள் முழுவதும் சண்முகத்திற்கு கொடுக்கப்பட்டதால் தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித பாக பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய எதிர் உரையில் குறிப்பிட்டுள்ளபடி பாக விகிதாசாரம் கோர எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சாமியப்பனின் மகன் சண்முகம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மனைவி மற்றும் மகள் ஆகிய 4,5 பிரதிவாதிகளுக்கு ஒரு தான செட்டில்மெண்ட எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் சரிதான். மிரட்டி கையொப்பம் வாங்கியுள்ளார்கள். எனது அப்பா, அம்மா, சகோதரன், சகோதரன் மகன் சண்முகத்தை மிரட்டி கையொப்பம் பெற்றதாக இதுநாள் வரை காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. ஜோதிமணி கொடுத்துள்ளார். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் எழுதி வைக்கப்பட்டவரின் விருப்பத்தின் பேரில் எழுதப்பட்டதால் தான் எவ்வித புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் சுமார் 48 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் செய்து வைக்கப்பட்டது. எங்களது ஜாதி வழக்கப்படி எனக்கு எத்தனை பவுன் நகைபோட்டார்கள் என்றால் 30 பவுன் நகை மற்றும் ரூ.10,000/- கொடுத்தார்கள். அந்த காலகட்டத்தில் திருமண செலவு பாதி செலவு எனது அப்பா செய்தார் என்றால் சரிதான். எனது அப்பா, அம்மா எழுதி வைத்த உயில் சாசனத்தில் எனது மகள் பழனியம்மாளுக்கு நல்ல முறையில் திருமணம் செய்து வைத்து சீர் சிறப்புக்கள் செய்ததால் எனது

மகளுக்கு சொத்துக்கள் எதுவும் கொடுக்க விரும்பவில்லை என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள் என்றால் எழுதியுள்ளார்கள். தற்போது எனக்கு சொத்து வேண்டும். எனது அப்பா, அம்மா இறந்த காலத்தில் எனக்கு உண்டான சீர் செய்தார்களா என்றால் அப்பா இறந்ததற்கு சீர் செய்தார்கள். அம்மா இறந்ததற்கு சீர் எதுவும் செய்யவில்லை. அம்மா இறந்த செலவை நான்தான் செய்தேன். அம்மாவிற்கு நான்தான் கொள்ளி வைத்தேன். சாமியப்பன் மகன் சண்முகமும் உயிருடன் இல்லை என்றால் சரிதான். நான் வேலாயுதம் பாளையத்திற்கு அருகில் உள்ள கந்தம்பாளையத்தில் குடியிருக்கிறேன். கந்தம்பாளையத்தில் நான் என் கணவர் மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்த ஜோதிமணி பெங்களூரில் உள்ளார் என்றால் சரிதான். அவர் பெங்களூர் சென்று சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் எழுநூத்திமங்கலம், வெட்டுக்காட்டூரில் அமைந்துள்ளது. வெட்டுக்காட்டூரில் 4,5 பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் என்ன விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் தென்னை மரம் உள்ளது, LBPதண்ணீர் வந்தால் எள் மற்றும் நெல் பயிர் செய்து வருகிறார்களா என்றால் என்ன பயிர் செய்து வருகிறார்கள் என்று தெரியவில்லை, அங்குள்ள தென்னை மரங்களை பராமரித்து வருகிறார்கள். தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் கணவர் சண்முகம் எழுதி வைத்த செட்டில்மெண்டின் சரத்துக்கள் படி 4, 5 பிரதிவாதிகள் தாவா சொத்து முழுவதையும் பாத்தியப்படுத்தி, சுவாதீனத்தில் இருந்து அனுபவத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. காட்டம்பட்டி வேலுச்சாமியை தெரியுமா என்றால் சாமியப்பனின் மைத்துனர். கருப்பையா எனது பங்காளி பையன் ஆவார். எனது அப்பா, அம்மா, சகோதரன் ஆகியோர்கள் எழுதி வைத்த ஆவணங்கள் அனைத்தும் மேற்படி வேலுச்சாமி, கருப்பையா ஆகியோருக்கும் நன்றாக தெரியும் என்றாலும், எனது அப்பா, அம்மா மற்றும் சகோதரன் விருப்பப்படி தான் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் எழுதி வைக்கப்பட்ட விவரங்கள் தெரிந்தும் பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்தில் எவ்வித பாக பாத்தியமும் கோர

## Copy of Deposition

தகுதியற்றவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.19 16:20:24 +0200<br><br>Subordinate Judge,<br>Kodumudi |